# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | <u>தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்</u><br><br>கூட்டுறவு நெசவாளர்களுக்கென 1975–76 ம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் இத்திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால் அதற்கு ஈடாக மாநில மற்றும் மைய அரசுகள் ஒவ்வொன்றும் ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வருகிறது. இந்த தொகைக்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்கி வருகிறது. இத் திட்டத்தில் 80,784 நெசவாளர்கள் உறுப்பினராக உள்ளார்கள். நெசவாளர்கள் ஓய்வுபெறும் போது கணக்கில் சேர்ந்துள்ள சந்தா தொகையுடன் மாநில அரசால் வழங்கப்படும் 9.5 விழுக்காடு வட்டி தொகையில் 6.5 சதவிகித வட்டித் தொகை சேர்த்து நெசவாளர்களுக்கு வழங்கப்படும். | 1) நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் குறைந்தது ஒரு ஆண்டு காலம் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br><br>2) திட்ட நிதியில் 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து சந்தா செலுத்தாதவராக இருக்கக்கூடாது. | 1. நெசவாளர் களின் வருடாந்திர வருமானம் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துறை துணை /உதவி இயக்குநர்கள் | இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம் சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>25341084 |
| 2 | <u>தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்</u><br><br>கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம் தமிழக அரசால் 01.01.1992 முதல் | 1) மாநிலத்திலுள்ள அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் இத்திட்டத்தில் நிபந்தனை களுக்குட்பட்டு சேர தகுதி பெறுகின்றன.<br>2. சங்கத்தில் தொடர்ந்து நெய்யும் உறுப்பினராக இருந்து 60 வயது கடந்தவராக இருத்தல் கூடாது. | நெசவாளர் களின் அடையாள அட்டை வேறு எந்த திட்டத்தின் கீழும் அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறவில்லை என்பதற்கான சான்று | ,, | ,, |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 1,153 நெசவாளர் குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். நெசவாளர்கள் 60 வயதிற்கு முன்னர் இறக்க நேரிட்டால் அவர் இறந்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.550/– குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. | 3. திட்டத்தில் சேர விண்ணப்பிக்கும் நாளில், குறைந்தது 2 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நெய்யும் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>4. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து சந்தா செலுத்தாதவராக இருக்கக்கூடாது. | | | |
| 3 | <u>**தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம்**</u><br><br>தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உறுப்பினர் களாகவும் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர்களாகவும் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம் மாநில அரசால் 1.4.1997 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் 15,338 நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். வயது முதிர்வினால் ஓய்வுபெறும் நாளிலிருந்து, அதாவது 60 வயது நிறைவடைந்த பின்னர் ஓய்வூதியமாக மாதம் ரூ.400/– வீதம் வாழ் நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. | 1) இத்திட்டத்தில் சேரும் உறுப்பினர் அவர் விண்ணப்பிக்கும் நாளில், குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் சங்கத்தில் தொடர்ந்து நெய்து வருபவராக இருந்திருக்க வேண்டும்.<br>2) சங்கத்திலுள்ள ஆவணங்களின்படி 60 வயது அடைந்தவராக இருத்தல் வேண்டும்.<br>3) சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் பங்கு பெற்ற ஓர் உறுப்பினராக இருத்தல் வேண்டும்<br>4) தொடர்ந்து 6 (ஆறு) மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்திற்கான சந்தா செலுத்துவதில் தவணை தவறியிருக்கக் கூடாது.<br>5) முதியோர் ஓய்வூதியம் பெறுகின்ற போதிலும் தொடர்ந்து நெசவு செய்வது அவரின் விருப்பத்தைப் பொருத்ததாகும், | 1) பிறப்புச் சான்றிதழ்<br>2) சங்கத்தில் சேர்ந்ததற்கான சான்றிதழ்<br>3) சம்மந்தப்பட்ட சங்கத்தின் 60 வயது முடிவடைந்த தற்கான சான்றிதழ் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துறை துணை/உதவி இயக்குநர்கள் | இயக்குநர்,<br>கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம்<br>சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>2534108 |
| 4 | <u>**தறிக்கூடம் அமைக்கும் திட்டம்**</u><br>நெசவாளர்கள் பணிபுரியும் இடங்களில் பணி சூழலை ஏற்படுத்தி உற்பத்தி அதிகரிக்கும் வகையில் நெசவாளர் குடியிருப்புகளில் தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தினை மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசு | 1) நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து நெய்து வரும் உறுப்பினராக இருத்தல் வேண்டும்<br>2) உறுப்பினர் பெயரில் சொந்தமாக வீடும், தறிக்கூடம் அமைக்க போதிய காலிமனையும் இருத்தல் வேண்டும். | பயனாளியின் பெயரில் வீட்டுடன் கூடிய நிலம் உள்ளதற்கான பத்திரம் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துறை துணை/உதவி இயக்குநர்கள் | ,, |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | செயல்படுத்தி வருகிறது. தறிகூடம் கட்ட கைத்தறி நெசவாளர் களுக்கு மானியத் தொகையாக ரூ.25,000 (மத்திய அரசு ரூ.18,750/–, மாநில அரசு ரூ.6,250/– கிடைப்பதோடு, தொழில் செய்வதற்கான நல்ல சூழ்நிலையும் ஏற்படுத்தப் படுகிறது. | 3) திட்டத்திற்கு பயனீட்டாளர் பங்குத் தொகை செலுத்த வேண்டும். | | | |
| **5** | <u>மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம்</u><br><br>கைத்தறி நெசவாளர்களுக்கு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு மைய அரசு ரூ.150/– ம், நெசவாளர்களுக்காக மாநில அரசு ரூ.80/– மற்றும் ஆயுள் காப்பீட்டு கழகம் ரூ.100/– ஆக மொத்தம் ரூ.330/– வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் 2,39,120 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.<br>1. இயற்கை மரணம் ரூ.60,000/–<br>2. விபத்து மரணம் ரூ.1,50,000/–<br>3. முழுவதும் செயல் இழந்தால் ரூ.1,50,000/–<br>4. பகுதி செயல் இழந்தால் ரூ75,000/–<br>9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு காலாண்டுதோறும் ரூ.300/– வீதம் ஒரு ஆண்டிற்கு கல்வித் தொகையாக ரூ.1200/– வழங்கப்படுகிறது. | 1) நெசவுத் தொழில் மூலம் 50 சதவீதம் வருமானம் ஈட்ட வேண்டும்<br>2) 18 வயது முதல் 59 வயதுடையவர்<br>3) கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>4) கூட்டுறவு சங்கத்தில் 180 பணிநாட்கள் இருத்தல் வேண்டும்<br>5) கூட்டுறவு அமைப்பில் இல்லாத நெசவாளர்கள் மாநில இயக்குநரின் சான்றிதழ் பெறவேண்டும்<br>6) மாநில கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். | திட்டத்தில் சேர்ந்ததற் கான அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும் | " | இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம் சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>2534108 |
| **6** | <u>நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டு திட்டம்</u><br>நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றி நோயற்ற வாழ்க்கைக்கு வழி வகுக்கும் வகையில் | 1) நெசவுத் தொழில் மூலம் வருமானம் 50 சதவீதம் ஈட்ட வேண்டும்<br>2) முதல் நாள் முதல் 80 வயதுடையவர்<br>3) கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். | திட்டத்தில் சேர்ந்ததற் கான அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும் | " | " |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டு திட்டம், ஐ.சி.ஐ.சி.ஐ லோம்பார்டு காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒவ்வொரு நெசவாளருக்கும் ரூ.642.47/– ம் மாநில அரசு நெசவாளர்களுக்காக ரூ.139.13/– ம் மொத்தம் ரூ.781.60/– ஐ.சி.ஐ.சி.ஐ. லோம்பார்டு நிறுவத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் 2,89,023 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு நெசவாளரும் ஆண்டொன்றுக்கு ரூ.15,000/– வீதம் மருத்துவ செலவு மேற்கொள்ளலாம் | 4) கூட்டுறவு அமைப்பில் இல்லாத நெசவாளர்கள் மாநில இயக்குநரின் சான்றிதழ் பெறவேண்டும் | | | |
| 7 | <u>**டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்குதல்**</u><br><br>கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்ககளில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களின் குழந்தைகள் மேற்படிப்பிற்கு ஊக்குவிக்கும் வகையில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கும் நோக்கோடு டாக்டர் எம்.ஜி.ஆர். நெசவாளர் அறக்கட்டளை 1986ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின் கீழ், கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.<br><br>10ம் வகுப்புக்கு - ரூ.2000/-<br>12 ம் வகுப்புக்கு - ரூ.2500/-<br>இளநிலை பட்டம்- ரூ.2500/- | கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் 10வது / +2 வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவர்களின் மேற்படிப்பிற்காக டாக்டர் எம்..ஜி.ஆர்.அறக்கட்டளை மூலம் அரசால் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. | 1) பள்ளி இறுதி சான்றிதழ்<br>2) சம்மந்தப்பட்ட சங்கத்தின் பரிந்துரை | " | இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம் சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>2534108 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | முதுநிலை பட்டம்- ரூ. 3500/-<br>தொழில்கல்வி – ரூ.3,500/–<br>விவசாய பட்ட படிப்பு – ரூ. 3,000/–<br>நர்சிங் பட்ட படிப்பு – ரூ. 2,500/–<br>முடநீக்கியல் மற்றும் கைத்தறி தொழில்நுட்பவியல் – ரூ. 3,000/–<br>இந்திய ஆட்சிப் பணி மற்றும் வங்கி அலுவலர் தேர்வு – ரூ. 2,500/– | | | | |
| 8 | **<u>கைத்தறி பகுதி மேம்பாட்டு திட்டம்</u>**<br>இந்தத் திட்டத்தின்கீழ் தறி மேம்பாடு, தறியில் மாறுதல்கள் செய்தல், தறி மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்தல், சாயமிடும் அலகு உருவாக்குதல், பொது வசதி மையம் நிறுவுதல், காட்சியறை நிறுவுதல் , பொருட்காட்சி நடத்துதல் விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் இப்பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஒட்டுமொத்த சமுதாய பொருளாதார நிலையினை மேம்படுத்தவும். | நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து தொழில் புரியும் கைத்தறி நெசவாளர்களாக இருத்தல் வேண்டும் | நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து நெசவுத் தொழில் புரிந்து வருபவராக இருத்தல் வேண்டும் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் | இயக்குநர்,<br>கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம் சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>2534108 |
| 9 | **<u>தள்ளுபடி மான்ய திட்டம்</u>**<br>நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை நம்பியுள்ள நெசவாளர் களுக்கு தொடர்ந்து தொழில் வழங்கவும் கைத்தறி துறையினை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கோடும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. | நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளை உடனுக்குடன் தங்குதடையின்றி சந்தையில் விற்பனை செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் | நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து நெசவுத் தொழில் புரிந்து வருபவராக இருத்தல் வேண்டும் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் | ,, |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | |
| 10 | **<u>கைத்தறி குழுக்கள் மேம்பாட்டு திட்டம்</u>**<br>1) நெசவாளர்களுக்கு அடிப்படை தேவையான புதிய கைத்தறி டாபி, ஜெக்கார்டு, மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும் நடைமுறை மூலதனத்திற்கு விளிம்புத் தொகைக்கும் மத்திய மற்றும் மாநில அரசுகளால் மானியம் வழங்கப்படுகிறது.<br><br>2) கைத்தறி தொழிலில் ஈடுப்பட்டுள்ள நெசவாளர்கள் தம் திறனை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அவர்களுக்கு நெசவு நெய்தல் சாயம் தோய்த்தல் புதிய வடிவமைப்புக்கள் மற்றும் நிர்வாக திறமை ஆகியவைகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. | தொடர்ந்து தொழில் புரியம் கைத்தறி நெசவாளர்களாக இருத்தல் வேண்டும் | நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து நெசவுத் தொழில் புரிந்து வருபவராக இருத்தல் வேண்டும் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் | ,, |
| 11 | **<u>இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்</u>**<br>347 கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக 15,000 கைத்தறி மற்றும் 30,000 விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. | ஏழை எளிய மக்களுக்கும் இலவச வேட்டி மற்றும் சேலை வழங்கப்படுகிறது. | வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக் கான சான்றிதழ் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் | இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம் சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>2534108 |
| 12 | **<u>இலவச சீருடை வழங்கும் திட்டம்</u>**<br>230 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் சுமார் 10,000 கைத்தறி மற்றும் 6000 விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. | சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்கள். | ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்க்கு பள்ளி சான்றிதழ் | ,, | ,, |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை (தொலைபேசி / நிகரி / விபரங்கள்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 13 | <u>**சிறந்த கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்**</u><br>நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இடையே உற்பத்தி திறனை ஊக்குவிக்கவும் நெசவாளர்கள் சிறந்த கூலி பெற்றிடவும் அமுல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.1,00,000/– பரிசு தொகையாக செலவிடப் படுகிறது | அயல்நாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை விரிவு படுத்துவதன் மூலம் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான தமிழக அரசு வழங்கும் பரிசு திட்டம் | அயல்நாட்டினருக்கு துணிவகைகளை ஏற்றுமதி செய்வதற்கு பெறப்பட்ட சான்றிதழ் | சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் | இயக்குநர்,<br>கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககம் சென்னை.<br>253141517<br>253140518<br>(நிகரி)<br>25351177<br>25342015<br>25341084 |